**செ. கு. எண்**:276 **நாள்**:28.12.2011

<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை - **28.12.2011**</u>

திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு. அ. சக்கரவர்த்தி அவர்கள் **26.12.2011** அன்று விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

திரு. சக்கரவர்த்தி அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விபத்தில் காலமான காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அ. சக்கரவர்த்தி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**